O.S.No. 103/2022 நாள் 18.09.2025 PW 1 – திரு. கண்ணப்பன்

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணை(பிரதிவாதிகள்தரப்பில்)

தாவா சொத்தில் ஆரம்பத்தில் நான் திலகராஜ் டெக்ஸ்டைல்ஸ் என்ற ஜவுளிகடை வைத்திருந்தேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் ஜவுளிகடை நடத்தி வந்தபொழுதுதான் அதை சென்னை சில்க்ஸ்-க்கு வாடகைக்கு விட்டேன் என்றால் சரிதான். சென்னைசில்க்ஸ்க்கு ஒரு வருட காலம் வாடகைக்கு கொடுப்பதாக ஒப்பந்தம் போடப்பட்டிருந்தது என்றால் சரிதான். மாத வாடகை ரூ.1,90,000/- என்று ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். நான் வாடகைக்கு விடும்போது தாவா கட்டிடத்தின் வயது என்னவென்றால் 25 வருடங்கள் இருக்கும். தாவா சொத்தை வாடகைக்கு விடும்போது துணி வைக்கும் ரக் உட்பட வாடகைக்கு விட்டேன் என்றால் சரிதான். என்னிடம் வாடகைக்கு எடுத்த உடனேயே சென்னை சில்க்ஸ் நிறுவனம் ஜவுளி வியாபாரத்தை ஆரம்பித்து விட்டது என்றால் சரிதான். தாவா சொத்தை வாடகைக்கு விடும்முன்பு கட்டிடத்தின் மதிப்பை காட்டக்கூடிய பொறியாளர் சான்று என்னிடம் கிடையாது என்றால் என் வசம் இருந்தது. மேற்படி மதிப்பு அறிக்கையை சென்னை சில்க்ஸ் நிறுவனத்திடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை வாடகைக்கு விடுவதற்கு முன்பு அதன் மதிப்பை காட்டக்கூடிய சான்றை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் வா.சா.ஆ-8 அறிக்கையைத்தான் குறிப்பிடுகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ-8 அறிக்கையானது 03.01.2019 அன்று பெறப்பட்ட அறிக்கை என்றால் சரிதான். சென்னை சில்க்ஸ் நிறுவனத்திற்கு வாடகைக்கு விடப்பட்ட நாளானது 26.09.2018 என்றால் சரிதான். இந்த அறிக்கை தயார் செய்யக்கூடிய நாளான 03.01.2019 அன்று சென்னை சில்க்ஸ் நிறுவனம் வாடகைதாரராக இருந்தார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தை அவர்கள் வாடகைக்கு எடுத்தபின்பு உள்கட்டமைப்பில் மாற்றங்கள் எதுவும் செய்யவில்லை என்றால் ரேக் அமைப்பை மாற்றினார்கள். புது ரேக்கை மாற்றும்போது என்னுடைய பழைய ரேக்கை என்னிடம் ஒப்படைத்து விட்டார்கள் என்றால் எல்லாவற்றையும் ஒப்படைக்கவில்லை, சிலவற்றை ஒப்படைத்தார்கள். தாவா சொத்தை வாடகைக்கு ஒப்படைக்கும்பொழுது அதில் என்னுடைய சொத்துக்கள் என்ன என்ன இருந்தது என்றும், அதன் மதிப்பும் வா.சா.ஆ-1 குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாடகைக்கு விடும்போது என்னுடைய என்ன என்ன பொருட்கள் இருந்தது என்றும், அதன் மதிப்பு என்ன என்றும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 30.10.2019 அன்று தாவா கட்டிடத்தில் அதிகாலை 4.00 மணியளவில் தீவிபத்து ஏற்பட்டது என்றால் தீவிபத்து ஏற்பட்டது. எனக்கு 4.20 மணிக்கு

தெரியும். தீவிபத்து ஏற்படும்பொழுது சென்னை சில்க்ஸ் நிறுவனத்தின் 3 பணியாளர்கள் தாவா கட்டிடத்தில் இருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா கட்டிடம் பக்கத்தில் எலட்ரிக்கல் போல் உள்ளது என்றால் சரிதான். தீவிபத்து ஏற்பட அன்று தாவா கட்டிட பகுதியில் மழை பெய்து கொண்டிருந்தது என்றால் சரிதான். தீவிபத்து ஏற்பட்ட உடனேயே சென்னை சில்க்ஸ் நிறுவனத்திடமிருந்து தீ அணைப்பு துறைக்கு தெரிவிக்கப்பட்டு தீ அணைப்பு வீரர்கள் வந்தார்கள் என்றால் சரிதான். தீ விபத்து ஏற்பட்டபோது சென்னை சில்க்ஸ் நிறுவனத்தின் ஜவுளி மற்றும் பொருட்கள் அனைத்து தீக்கிரையானது என்றால் அனைத்தும் எரிந்துபோய்விட்டதா என்று தெரியாது. நான் ஜவுளி வியாபாரம் செய்யும்போது ஜெனரேட்டர் வசதி வைத்திருந்தேனா என்றால் வைத்திருந்தேன். நான் வாடகைக்கு கொடுத்தபொழுது வைத்திருந்த ஜெனரேட்டர் மற்றும் எலக்ட்ரிக்கல் சர்க்யூட் மூலம் தீவிபத்து ஏற்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தீவிபத்து சம்மந்தமாக முதல்தகவல் அறிக்கை காவல்துறையால் பதிவு செய்யப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள முதல்தகவல் அறிக்கை எது சம்மந்தப்பட்டது என்றால் தாவா கட்டிடத்தின் விபத்து சம்மந்தப்பட்ட அறிக்கை. அந்த முதல்தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் படித்து பார்த்த முதல்தகவல்அறிக்கையில் தீ விபத்திற்கான காரணம் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் எல்க்ட்ரிக்கல் போஸ்ட்டிலிருந்து ஸ்பார்க்காகி தீ விபத்து ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. இதுபோன்ற அறிக்கைதான் தீ அணைப்பு துறையினராலும் வழங்கப்பட்டுள்ளது என்றால் அவர்கள் சரியான காரணம் சொல்லவில்லை. முதல்தகவல் அறிக்கை, தீஅணைப்பு துறையினரால் கொடுக்கப்பட்ட அறிக்கை ஆகியவற்றில் தீ விபத்தினால் ஏற்பட்ட சேதமதிப்பு பற்றி கூறியுள்ளார்களா என்றால் அது பற்றி தெரியாது. தீ விபத்திற்கு பின்பு தாவா சொத்தை காலி செய்து பிரதிவாதி எப்போது ஒப்படைத்தார் என்றால் தீ விபத்திற்கு பிறகு சுமாராக 5 மாதங்களில் ஒப்படைத்தார். தீ விபத்து ஏற்பட்டவுடன் தாவா சொத்தில் எவ்வளவு சேதம் ஏற்பட்டது என்று மதிப்பீட பிரதிவாதிக்கு கடிதம் எதுவும் அனுப்பினேனா என்றால் வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பினேன். வா.சா.ஆ-4 வழக்கறிஞர் அறிவிப்பில் தற்போது வழக்கில் கூறியுள்ள சேதமதிப்பான ரூ.1,50,00,000/- குறிப்பிடப்படவில்லை என்றால் நினைவில்லை. நான் 2 வதாக அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிலும் சேத மதிப்பை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். யாருடைய அறிக்கையின் அடிப்படையில் சேதமதிப்பை ரூ.1,50,00,000/-மாக மதிப்பீடு செய்துள்ளேன் என்றால் வா.சா.ஆ-8 ன் அடிப்படையில் மதிப்பீட்டுள்ளேன். வா.சா.ஆ-4, 6 வழக்கறிஞர் அறிவிப்புடன் வா.சா.ஆ-8 அறிக்கையை இணைத்து அனுப்பவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-8 ல் என் கட்டிடத்தை சுற்றிபார்த்து கட்டிடத்தின் மதிப்பைத்தான் நிர்ணயம் செய்துள்ளார் என்றாலும், சேதமதிப்பை நிர்ணயிக்கவில்லை என்றாலும் மேற்படி மதிப்பீடு கட்டிடத்தின் மதிப்பை அளவீடு செய்யத்தான் மேற்கொள்ளப்பட்டது. தீ விபத்து சம்மந்தமாக ஏற்பட்ட சேதத்தின் மதிப்பை காட்டக்கூடிய அறிக்கை என்

வசம் இல்லை என்றால் சரிதான். கட்டிடத்தை காலி செய்து என்னிடம் ஒப்படைத்தபொழுது ரூ.1,50,00,000/- சேதம் இருப்பதாக சொல்லி பிரதிவாதியிடம் எழுதி வாங்கவில்லை என்றால் அவர்கள் முறையாக ஒப்படைக்காததால் எழுதி வாங்க முடியவில்லை. தாவா சொத்தை காலி செய்து தாவா சொத்தின் சாவியை பதிவு அஞ்சல் மூலமாக பிரதிவாதி அனுப்பினார் என்றால் அது எனக்கு வரவில்லை. தாவா சொத்தை என்னிடம் முறையாக ஒப்படைத்தார் என்றும், சேதம் எதுவும் ஏற்படாததால்தான் சேதமதிப்பு பற்றி என்னால் எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. பிராதிலும் என்ன என்ன பொருட்களுக்கு எவ்வளவு சேதம் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு தனித்தனியாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருக்கும்போது தாவா சொத்தை பிரதிவாதி நிறுவனத்திற்கு விற்பனை செய்துவிட்டேன் என்றால் இல்லை. தாவா சொத்தின் உரிமையாளர் யார் என்றால் பாலமுருகேசன். தற்போது தாவா சொத்தின் வில்லங்க சான்றிதழை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் இயற்கையின் காரணமாகத்தான் தீவிபத்து ஏற்பட்டது என்றாலும், அதனால் நான் கேட்டுள்ள சேதாரமான ரூ.1,50,00,000/-ஐ பிரதிவாதி செலுத்தவேண்டிய தேவையில்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியிடமிருந்து பணம் பறிக்க வேண்டிய நோக்கத்தில்தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.